கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## முன்னுரை

வணிகவரித்துறை, மிக அதிக அளவு வரி வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத்துறையாகும். இத்துறை, 1995-96ல் வசூலித்த மொத்த வரிவருவாய் ரூ.5,023 கோடியாகும். இது, மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 70 விழுக்காடாகும். 1996-97ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய மேற்கொள்ளப்பட்ட வரிவசூல் ரூ.5,137 கோடியாகும். சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் வணிகவரித்துறையின் தலைவராவார். அவருக்கு

உதவியாக தலைமை அலுவலகத்தில், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் உள்ளனர். களப்பணியில் இவருக்கு உதவ, துணை ஆணையர்கள் (ஆட்சிப்பகுதி) மற்றும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) உள்ளனர். கள வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் அலுவலகங்கள், வணிகவரி அதிகாரிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. இணைப்பில் உள்ள விளக்கப்படம் இந்த அமைப்பின் ஒட்டுமொத்த நிலையைக் காட்டுகிறது.

2. வணிகவரித்துறை, பின்வரும் வரி விதிப்புச் சட்டங் களைச் செயல்படுத்தி வருகிறது:

★ தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

★ 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.



★ தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

★ தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

3. வணிகவரித்துறை செயலாக்கிவரும் பல்வேறு சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வரி வசூல் குறித்த ஆண்டு வாரியான விவரம் கீழ்காணும் அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன:-

வரி வரவுகள்

| சிறு தலைப்புகள் | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 (1997 பிப்ரவரி முடிய) |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்) | | | |
| பொது விற்பனை வரி | 2,130 | 2,505 | 2,818 | 3,453 | 4,119 | 4,201 |
| மத்திய விற்பனை வரி | 330 | 362 | 393 | 477 | 590 | 611 |
| கேளிக்கை வரி | 69 | 76 | 82 | 88 | 99 | 98 |
| குதிரைப் பந்தய வரி | 5 | 5 | 6 | 5 | 6 | 6 |
| ஆடம்பர வசதிகள் வரி | 17 | 22 | 28 | 36 | 51 | 55 |
| நுழைவு வரி | 25 | 42 | 70 | 105 | 158 | 166 |
| மொத்த வரி வருவாய் | 2,576 | 3,012 | 3,397 | 4,164 | 5,023 | 5,137 |

4. வரி விதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 31.3.96 ஆம் நாள் நிலவரப்படி 1,44,284 ஆகும். இதில், மத்திய

விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்பட்ட 37,455 பேரும் அடங்குவர். பதிவு பெற்ற வணிகர்களின் மொத்த எண்ணிக்கை மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வருகின்ற 1,82,040 வணிகர்கள் உட்பட 3,31,844 ஆகும்.

## முக்கிய கொள்கை மாற்றங்கள்

5. தொழில் வளர்ச்சியையும், வணிக வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக, நிலையான, தெளிவான, நேயமான வரிவிதிப்புச் சூழ்நிலையை உருவாக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை அறிவித்தார்கள். அதன்படி, விற்பனை வரி விதிப்பு அமைப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்வேறுவகை பொருட்களுக்கான வரி வீதங்கள் குறைக்கப்பட்டன. வணிகச் சமுதாயமும் தொழில் முனைவோரும் இதனைப் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இந்த நீண்டகால வரி விதிப்புக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாவன:-

★ வரி வீதங்களைப் பெருமளவு வெளிப்படையானதாகச் செய்வதற்கும், வரிவிதிப்பு மற்றும் வரி வசூலை எளிமையானதாகச் செய்வதற்கும், வரி வீத அமைப்பையும், படிமுறைகளையும் சீரமைத்தல்.

★ வரி விதிப்பில் மிகவும் நவீனமுறைகளையும், நவீன நடைமுறைகளையும் கொண்டுவருதல்.



★ இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வகை செய்தல் மற்றும் உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பை ஊக்கப்படுத்தல்.

★ வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி மதிப்பு போன்ற வரிவிதிப்பு நடைமுறைகள் என்ற வகையில் பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

★ வீட்டுத் தேவைப் பொருட்கள் மீதான வரியைக் குறைத்தல்.

6. அரசின் நீண்டகால வரிக்கொள்கையைச் செம்மையாகச் செயல்படுத்த ஏற்றவகையில் விற்பனை வரி அமைப்பு மற்றும் நடைமுறைகளில் மேற்கொண்டு மாற்றங்கள் செய்வது பற்றி ஆய்வு செய்ய திரு சி. தங்கராசு, இ.ஆ.ப., (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தலைவராகவும், பின்வருவோர்களை உறுப்பினர் களாகவும் கொண்டு அரசு விற்பனைவரி சீர்திருத்தக்குழு ஒன்றை அமைத்தது.

1. திரு. ஆர். சொக்கர்,
   சட்டமன்ற உறுப்பினர்,
   சிவகாசி தொகுதி.

2. திரு. என்.எஸ்.ஆர். மன்றாடியார்,
   சட்டமன்ற உறுப்பினர்,
   காங்கேயம் தொகுதி.

3. திரு. எஸ். ரத்தினவேலு, பி.காம், பி.எல்.,
   தலைவர், தமிழ்நாடு வணிகக் கழகம், மதுரை.

4. திரு. எல். ஞானராஜன்,
தலைவர்,
திருச்சி வணிகக் கழகம், திருச்சி.

5. திரு. ஏ. ஜெயசீலன், பி.எஸ்ஸி.,
சேலம் மாநகர் வணிகக் கழகம்,
லீ. பஜார், சேலம்.

6. திரு. சி. நடராஜன்,
வழக்குரைஞர்,
விற்பனை வரி மூத்த வழக்குரைஞர்.

7. திரு. ராம். தியாகராஜன்,
தலைவர்-நிருவாக இயக்குநர்,
ஆரூரான் சர்க்கரை ஆலை.

இக்குழுவின் ஆய்வு வரம்புகள் வருமாறு:-

1) எளிதான நிருவாகத்திற்கும், வர்த்தக சமுதாயத்தினருக்குரிய இடர்ப்பாட்டை குறைக்கவும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழுள்ள தற்போதைய வரி அமைப்பு முறையையும், நடைமுறையையும் ஆய்வு செய்தல்.

2) வரி ஏய்ப்பு செய்யப்படுவதைக் குறைக்கவும், மாநில வரி வருவாயைப் பெருக்கவும், அண்டை மாநிலங்களின் வரி வீதங்களைக் கருத்திற்கொண்டு வரிவீதத்தை ஆய்வு செய்தல்.

3) குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள



வரி விலக்குகள் குறித்த தற்போதுள்ள அறிவிக்கைகளை ஆய்வு செய்தல்.

4) இம்மாநிலத்திற்குள் வண்டிகளின் போக்குவரத்து குறித்து சோதனைச் சாவடிகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தல்.

5) விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகள் குறித்த பல்வேறு சட்டங்களை ஆய்வு செய்தல்; மற்றும் இச்சட்டங்களின் நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

6) சட்டத்தின் கீழ் அபராதங்களை விதிப்பது குறித்த விதி முறைகளை ஆய்வு செய்து, பரிந்துரைகளை வழங்குதல்.

7) இடர்ப்பாட்டினைத் தவிர்க்க மேல்முறையீடு, மறு ஆய்வு நடைமுறையைச் சீரமைத்தல்.

8) தற்போதுள்ள படிவங்களை ஆய்வு செய்து, படிவங்களை எளிமையானவையாகச் செய்வதற்குப் பரிந்துரைத்தல், வரிவிதிப்பு வட்டங்களிலும் சோதனைச் சாவடிகளிலும் கணினிகளைப் பயன்படுத்தி அவற்றிற்கிடையே தகவல் தொடர்பை இணைத்தல்.

9) சென்ற வரவு - செலவுத் திட்டத்தில் வரிவிதிப்பு நடவடிக்கைகளில் முரண்பாடு ஏதுமிருந்தால், அந்த முரண்பாடுகளைச் சரி செய்வதற்கான கருத்துக்களைத் தெரிவித்தல்.

பல்வேறு வணிகக் கழகங்கள், வணிகர் சங்கங்கள், தனிப்பட்ட வணிகர்கள், வரி வழக்குரைஞர்கள், பணியிலிருக்கும் துறை அதிகாரிகள், ஓய்வு பெற்ற துறை அதிகாரிகள் ஆகியோருக்கு வினாப்பட்டியல் ஒன்றை இக்குழு வழங்கியுள்ளது.

இக்குழு, தமிழ்நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுக்கும், மும்பாய், பாண்டிச்சேரி, ஐதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, பல்வேறு குழுக்களுடன் கலந்து பேசியது. வரிவிதிப்பு அமைப்பு முறையைச் சீரமைத்தல், அதற்கான நடைமுறைகளை மேம்படுத்தல், வணிகச் சமுதாயத்தினரின் உண்மையான இன்னல்களை நீக்குதல் மற்றும் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகியவையே இக்குழுவின் முக்கிய பணியாகும். விற்பனை வரி சீர்திருத்தக் குழுவின் நோக்கம், கூடுதல் வரி வருவாய் ஈட்டுவதாகும். முக்கியமாக பின்வரும் பிரச்சினைகள் குறித்து, இக்குழு அதன் அறிக்கையை அளித்துள்ளது.

அவையாவன:

போலியான பதிவுகளையும், அதன் மூலம், வரி ஏய்ப்பு செய்வதையும் நீக்கும் நோக்குடன் வணிகர் களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளை மேம்படுத்தல்.

பொருள் விளக்கம் தெளிவற்றிருப்பதை நீக்கவும், வரி ஏய்ப்பைக் குறைக்கவும், வரி விதிப்பு வீதங்களைச் சீரமைத்தல்.

மேல்முறையீடுகள், மறு ஆய்வு மனுக்கள் ஆகிய வற்றுக்கான நடைமுறைகளைச் சீரமைத்தல்.

நடுவர் மன்றத்தின் சில ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்குப் பதிலாக, மேல்முறை யீட்டு ஆணைகளை துறை தாமாகவே மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களை நீக்குதல்.



சோதனைச் சாவடிகள் நிருவாகத்தை மேம்படுத்தல்.

மாநிலத்திற்கு வெளியில் தலைமை அலுவலகங் களைக் கொண்டுள்ள பொறுப்பு முதல்வர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் முகவர்களுக்கான கூடுதல் விற்பனை வரி விதிப்பிலுள்ள வேறுபாட்டை நீக்குதல்.

## வரி வீதங்கள் சீரமைப்புக் குழு

7. வரி வீதங்கள் சீரமைப்புக் குழு ஒன்று ஆண்டுதோறும் அமைக்கப்படுகின்றது. வணிகவரி மற்றும் அறநிலையத்துறை செயலரைத் தலைவராகவும், சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர், நிதித்துறைச் செயலர் ஆகியோரை உறுப்பினர் களாகவும், இணை ஆணையரை (தாமாகவே வரியைத் திருத்தும் அதிகாரம் பெற்றவர்) உறுப்பினர் செயலராகவும் கொண்டு, 1997-98 ஆம் ஆண்டிற்கென இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு வரிவீதங்களைச் சீரமைப்பதற்கான வழிகள் குறித்தும், வரவு-செலவுத் திட்டம் குறித்த ஏனைய தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் ஆய்வு செய்கிறது. விற்பனை வரி சீர்திருத்தக்குழு அளித்த பரிந்துரைகளையும் இக்குழு பரிசீலித்து தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்வதற்கு முன்னர், வரி வீதங்கள் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.



109/97--2

## பொது விற்பனை வரியின் வரிவிதிப்பு முறையில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்தல்

8. மேலே விளக்கியுள்ள நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, *1996-97* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு பொது விற்பனை வரி வீதங்கள் மற்றும் முறைகள் ஆகியவற்றில் பெரிய மாற்றங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப் பட்டு அதன்படி வீட்டு உபயோகம், வணிகம், தொழில் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளிப்பதற்காக பல்வேறு வகைப்பாடுகள் தொடர்பான வரிகள் குறைக்கப்பட்டன. விற்பனை வரி சீர்திருத்த குழுவின் பரிந்துரையின்படி, இம்மாநிலத்தில், வேளாண்மை, வணிகம், தொழில் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், *1997-98* ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பின்வரும் வகையில் மேற்கொண்டும் வரியைக் குறைத்து நிவாரணம் அறிவித்துள்ளார். அவையாவன:-

### வரிவிலக்கு அளிக்கப்பட்ட இனங்கள்

***11 சதவீதத்திலிருந்து:***

மீன் உணவு

தேங்காய் ஓடுகளும் துண்டுகளும்

நிலக்கடலை ஓடுகள்

சிகைக்காய்த்தூள்

தயிர்



பஞ்சாமிர்தம்

கல்விக்கான விளக்கப் படங்கள்

சுற்றுலா வழிகாட்டி மற்றும் வரைபடங்கள்

பளுவான பெரிய சம்மட்டி

பழைய வெள்ளி மெட்டி கொலுசு மற்றும் அரைஞான்

***8 சதவீதத்திலிருந்து:***

மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள் ஆகியன

புற்றுநோய், தொழு நோய், காச நோய் ஆகிய நோய்களின் சிகிச்சைக்கான உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் நாட்டு மருந்துகள் ஆகியவற்றின் 39 இனங்கள்

சூரிய ஒளி மின்கலங்கள்

ரூ.50/-க்குக் குறைவான விலையுள்ள காலணிகள்.

***4 சதவீதத்திலிருந்து:***

கால்நடைத் தீவனம்

தொன்னை

சாம்பிராணி

இயலாதவர்களுக்கான மிதி வண்டி

செங்கற்கள், ஓடுகள் செய்வதற்கான களிமண்

சென்னா இலைகள், விதை ஓடுகள், நிலவாகைச் செடியின் இலைகள்.

மரவள்ளிக் கிழங்கு கப்பி, திப்பி

**2 சதவீதத்திலிருந்து**

கனிமங்கள்-உலோகங்கள் வர்த்தகக் கழகம்
தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை
செய்கின்ற தங்கம்

**பின்வரும் இனங்களுக்கு வரிவீதம் குறைக்கப்பட்டுள்ளது:-**

| | இனம் (1) | தற்போதைய வரிவீதம் (2) | குறைக்கப் பட்ட வரி வீதம் (3) |
|---|---|---|---|
| 1. | தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் | 20% | 4% |
| 2. | மூக்குக் கண்ணாடி வில்லைகள் | 20% | 8% |
| 3. | தட்டச்சுப் பொறிகள் | 20% | 8% |
| 4. | கண்ணாடியிலான சிறு மணி மற்றும் கோலிகுண்டு | 16% | 4% |
| 5. | கொசுவத்தி சுருள் கொசுவத்தி மருந்து கொசுவிரட்டி | 16% | 4% |
| 6. | மின்னணு பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள் | 11% | 2% |



| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 7. | தலைக்கவசங்கள் | 11% | 4% |
| 8. | நிலக்கரித்தூள் கலந்த சாணவரட்டி | 11% | 4% |
| 9. | சரளைக் கற்கள் | 11% | 4% |
| 10. | பொம்மைகள் | 11% | 4% |
| 11. | மாணவர்கள் வண்ணம் தீட்டுவதற்குப் பயன்படுத்தும் எழுது பொருள் இனங்கள் | 11% | 4% |
| 12. | வறுத்த நிலக்கடலைப் பருப்பு | 11% | 4% |
| 13. | தெளிப்புமுறை சொட்டுநீர் பாசனச் சாதனங்கள் | 11% | 4% |
| 14. | காகிதத்தினால் ஆன பைகள் | 11% | 8% |
| 15. | குடைகள் | 11% | 8% |
| 16. | கைவினைப் பொருட்கள் | 11% | 8% |
| 17. | 30 அடிச்சரக்கு இனங்கள் | 11% | 8% |
| 18. | தார்ப்பாய்கள் | 11% | 8% |
| 19. | சூட்கேஸ் | 11% | 10% |
| 20. | ஆயில் எஞ்சின் பாகங்கள் | 11% | 10% |
| 21. | மேசை மற்றும் நாற்காலி போன்ற அறைக்கலன்கள் | 11% | 10% |

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 22. | வணிகப் பெயருடன் கூடிய வெண்ணெய், நெய் | 11% | 10% |
| 23. | சரிகை | 8% | 2% |
| 24. | செயற்கை நூல் மற்றும் இழை | 8% | 2% |
| 25. | சுவையூட்டப்பட்ட பால் | 8% | 4% |
| 26. | கழிவுத் தாள் | 8% | 4% |
| 27. | கல்வி நிறுவனங்களுக்கு விற்கப்படும் அறிவியல் சாதனங்கள் | 8% | 4% |
| 28. | தையல் மற்றும் பூத்தையல் இயந்திரங்கள், பாகங்கள் அதன் ஊசிகள் | 8% | 4% |
| 29. | வணிகப் பெயர் குறிப்பிடப் படாத காலணிகள் | 8% | 4% |
| 30. | பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் ஆகியவற்றிலான வீட்டுப் பாத்திரங்கள் | 8% | 4% |
| 31. | பின்னலாடைகள் | 4% | 1% |
| 32. | யூரியா | 4% | 2% |
| 33. | தேங்காய் மற்றும் கொப்பரை | 4% | 2% |
| 34. | பருத்தி | 4% | 2% |



விற்பனை வரிச்சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு வரிவீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப் பட்டுள்ளன:-

பருத்தி மீதான கொள்முதல் வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. சரிகை மீதான விற்பனைவரி 8-லிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. ஏனைய மாநிலங்களில் உள்ள முகவர்களுக்கு கிளை மாற்றம் வழியிலோ அல்லது ஒப்படைப்பு மாற்றம் வகையிலோ விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், மனிதனால் தயாரிக்கப் பட்ட செயற்கை நூல் மற்றும் இழைப் பொருட்களுக்கு விற்பனை வரி 8-லிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் மாதாந்திர வீதங்களின் அடிப்படையில் படித்தர முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளுக்கு விற்பனை வரி விதிக்கப்படும்:-

| | |
|---|---|
| ஆண்டு விற்பனைத் தொகை 3 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 5 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்: | ரூ.500.00 |
| ஆண்டு விற்பனைத் தொகை 5 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 10 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் | ரூ.1000.00 |
| ஆண்டு விற்பனைத் தொகை 10 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 20 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் | ரூ.2000.00 |

| | |
|---|---|
| ஆண்டு விற்பனைத் தொகை<br>20 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால்<br>30 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் | ரூ.4000.00 |
| ஆண்டு விற்பனைத் தொகை<br>30 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால்<br>40 இலட்சத்திற்கு குறைவாக இருந்தால் | ரூ.6000.00 |
| ஆண்டு விற்பனைத் தொகை<br>40 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால்<br>50 இலட்சத்திற்கு குறைவாக இருந்தால் | ரூ.7000.00 |
| ஆண்டு விற்பனைத் தொகை<br>50 இலட்சத்திற்கு மிகையாக<br>இருந்தால் | தற்போதுள்ள<br>4% தொடர்ந்து<br>செயலில்<br>இருக்கும். |

இம் மாற்றங்கள் 6 மாதத்திற்குள் மறு ஆய்வு செய்யப்படும்.

## சோதனைச் சாவடிகள்

9. வணிகவரி சோதனைச் சாவடிகளின் செயல்பாட்டை ஆய்வு செய்யும் பொருட்டு அரசு சோதனைச் சாவடிக்குழு ஒன்றை அமைத்தது. மாநில எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகள் நீங்கலாக, மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள தேவையற்ற சோதனைச் சாவடிகளை நீக்கி அவற்றுக்குப் பதிலாக சுழற்படைகள் அமைக்கப்பட வேண்டுமென சோதனைச்சாவடிக் குழு செய்த பரிந்துரையை விற்பனைவரிச் சீர்திருத்தக்குழு ஆமோதித்துள்ளது. இந்தப் பரிந்துரை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப் பரிந்துரை படிப்படியாகச் செயற்படுத்தப்படும்.



## வணிகவரித் துறை அமைப்பு

10. வணிகவரித் துறை 4 பிரிவுகளாகச் செயல்படுகிறது.

(1) வரி மதிப்பீட்டுப் பிரிவு

(2) மேல்முறையீட்டுப் பிரிவு

(3) செயலாக்கப் பிரிவு

(4) தணிக்கைப் பிரிவு

**வரி மதிப்பீட்டுப் பிரிவு:**

இம்மாநிலம் ஒன்பது வணிகவரி கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரிக் கோட்டமும் ஒரு வணிகவரித் துணை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டம் வணிகவரி மாவட்டங்கள் அல்லது வணிகவரி சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது 40 வணிகவரி மாவட்டங்கள்/சரகங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும்/சரகமும் ஒரு வணிகவரி உதவி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கிவருகிறது.

வணிகவரி மாவட்டம்/சரகம் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 320 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் மத்திய வரி விதிப்பு வட்டங்கள் என அழைக்கப்படும் 6 வரி விதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும்



109/97–3

கோயம்புத்தூரில் 2) வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையில் இயங்குகின்றன. 233 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், மீதமுள்ள 81 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.

**மேல்முறையீட்டுப் பிரிவு:**

விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் 20 மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி முன்னேற்றத்தை மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், பணி முன்னேற்றம் குறித்து அரசும் ஆய்வு செய்து வருகிறது.

சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய வரிவிதிப்பு வட்டங்களில் உதவி ஆணையர்களின் வரிவிதிப்பு ஆணைகளை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளை மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் விசாரித்து முடிவு செய்கின்றனர். வணிகவரி அதிகாரிகள், துணை வணிகவரி அதிகாரிகள், உதவி வணிகவரி அதிகாரிகள் ஆகியோரின் வரிவிதிப்பு ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் விசாரித்து முடிவு செய்வார்கள்.

மேல்முறையீட்டு நடுவர் மன்றம்:

இம்மாநிலத்தில் விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு அது மேல் முறையீட்டு உதவி ஆணையரின் (வணிக வரிகள்) ஆணைகளின் பேரில் எழும்



மேல்முறையீடுகளை விசாரித்துத் தீர்வு வழங்குகிறது. விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன.

சென்னை (முதன்மை ஆயம்)

சென்னை (கூடுதல் ஆயம்)

கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

மதுரை (கூடுதல் ஆயம்)

சென்னையிலுள்ள முதன்மை ஆயத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள அலுவலர் நடுவர் மன்றத் தலைவராக உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார் நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார்.

**செயலாக்கப் பிரிவு:**

இந்த மாநிலத்தில், ஏழு செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. இந்த ஏழு செயலாக்கக் கோட்டங்களும் வணிகவரிகள் துணை ஆணையர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சோதனைச் சாவடிகள் வழியாக செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப்பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

தற்போது மாநிலத்தில் 61 வணிகவரி சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன. அவற்றுள் 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன.

சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்த்து வாகனங்களை விரைவாக சோதனை செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு நாளைக்கு 1000 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 61 சோதனைச் சாவடிகளில் 23 பெரிய சோதனைச் சாவடிகள் ஆகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஓசூர், கந்தேகவுண்டன் சாவடி, ராணிப்பேட்டை, புழல், தோப்பூர் மற்றும் கணியூர் ஆகியவை இருவழிச் சோதனைச் சாவடிகள் ஆகும்.

நிலம் கிடைப்பதைப் பொறுத்து, சோதனைச் சாவடிகளை மேலும் சீரமைப்பது, நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல் ஆகியன அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

**தணிக்கை பிரிவு:-**

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவதிப்பு மற்றும் வரிவசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. மாநிலத்தில் தற்போது 42 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை, சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல் திட்டங் களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகத்தில் துறைத் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக் காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக்களையும் பணி ஆகியவை சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக் கொண்ட தனிக்குழுவினால் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலாண் டிலும், அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கைக் குழுவால் தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கைக் குழுவின் அறிக்கை தொடர்பான குறை நீக்கு நடவடிக்கை, குறைகள் முற்றிலுமாக நீக்கப்படும் வரையில், மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கை குழு மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் ஆகியவை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப் படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களின் அண்மைக்கால தீர்ப்புகள் அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும், செய்தித் தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கைக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் அமைத்தல்:

11. தேங்கியுள்ள வரி விதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும், அதனால் அரசுக்கு சேர வேண்டிய ஏராளமான வரித் தொகைகளை வசூல் செய்யவும் 'வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்' ஒன்றை அரசு ஏற்படுத்தி இது 1.1.1996 ஆம் நாளிலிருந்து இயங்கி வருகின்றது. இது வரையில் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச்சட்டம், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம், மற்றும் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு

விற்பனை வரி (பேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ்வரும் வணிகவரி வழக்குகளை மட்டும் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும்.

## கட்டிடங்கள்

12. வணிகவரித்துறை அலுவலகங்கள் அனைத்தும் படிப் படியாக அரசுக் கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் (சென்னை மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இதுபோன்றே 6 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர்களின் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 13 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்ற 370 அலுவலகங்களில் 136 அரசுக் கட்டிடங்களிலும் 234 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

61 சோதனைச் சாவடிகளில் 14 சோதனைச் சாவடிகள் நிரந்தர மான அரசுக் கட்டிடங்களிலும் மற்ற சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களிலோ அல்லது கீற்றுக் கொட்டகைகளிலோ செயல்பட்டு வருகின்றன.



## வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை

13. வணிகவரித்துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் சென்னையில் நிறுவப்பட்டது. 1982-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பிரிவிற்கு வணிகவரி துணை ஆணையர் ஒருவர் தலைவராகவுள்ளார். இவருக்கு வணிகவரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு ''நினைவுகூர் பயிற்சி'' வகுப்புகளை நடத்துகிறது. பல்வேறு துறையிலிருந்து திறமைமிக்க அலுவலர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரை வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டில் ஜனவரி 1997 முடிய 39 வணிகவரி அலுவலர்களுக்கும் 83 துணை வணிகவரி அலுவலர்களுக்கும் 60 உதவி வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

கணிப்பொறிமயமாக்குவதற்கான, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்பு கின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய தெளிவும் அனுபவமும் தேவை. எனவே உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்கு கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது.

## கணிப்பொறி மையம்

14. வணிகவரித்துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும் நிருவாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் நிறுவப் பட்டுள்ளது. 1996-97-ல் பின்வரும் பணிகள் செய்து முடிக்கப் பட்டன.

1995-96 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன் கீழ் பண்டவாரியான விற்றுமுதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகரிடமிருந்து பெறப்படும் மாதாந்திர 'அ1' அறிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு, வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. அதன் பின்னர், டிசம்பர் 1996 வரை வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. இத் தகவல் வரி விதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றது.

இது தவிர, டிசம்பர் 1995, மார்ச் 1996, ஜுன் 1996, செப்டம்பர் 1996 மற்றும் டிசம்பர் 1996 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வணிகவரி சோதனைச் சாவடிகளிலிருந்து பெறப்பட்ட ''தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்கள்'' விவரங்கள் தொகுக்கப் பட்டன. இத்தகவல்கள் வரி ஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றன. வணிகர் விவரப் பட்டியல் 1.4.1996 அன்றைய நிலை வரை தயாரிக்கப்பட்டுள்ளது.

1987-ஆம் ஆண்டில் வணிகவரித்துறையில் நிறுவப்பட்ட கணினி தகவல் பதிவு இயந்திரங்கள் பழையனவாகி விட்டதால், சில சாதனங்களை தரம் உயர்த்துதலும், மாற்றியமைத்தலும்



மேற்கொள்ளப்பட்டன. வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, அரசு செயலர் அலுவலகத்திலும் அரசு கூடுதல் வழக்குநடத்துநர் (வணிகவரி) அலுவலகத்திலும் கணினிப் பொறிகள் நிறுவப் பட்டுள்ளன. சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை (மத்திய) கோட்டம் ஆகிய துணை ஆணையர்கள் பயன்படுத்துவதற்காக, சென்னை-6 கிரீம்ஸ் சாலை, வணிகவரி கணினி மையத்திலும் கணினி அமைப்பு நிறுவப் பட்டுள்ளது.

வணிகவரித்துறை முழுவதிலுமாக படிப்படியாக, கணினிமயமாக்கக் கருதப்பட்டுள்ளது. அடிமட்டத்திலிருந்து வரிவிதிப்பு வட்டாரங்கள் மற்றும் முக்கிய சோதனைச் சாவடிகள் கணினி மயமாக்குவதற்கு முழு கவனம் செலுத்தப்படும். திருச்சி மதுரை, கணினி மையங்களின் திறனை மேம்படுத்துவது பற்றியும் அரசு புரிசீலித்து வருகிறது. இதற்காக ரூ.3 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வணிகர் நல வாரியம்

15. வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் 11.5.89-ஆம் நாளிட்ட 332ஆம் அரசாணையில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ் வாரியத்தின் தலைவராகவுள்ளார். வணிகவரித்துறை அமைச்சர் இவ்வாரியத்தின் இணைத் தலைவர் ஆவார்.



109/97–4

இவ்வாரியத்தில் அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லாதவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 1996-97 வரை இவ்வாரியம், 23,237 ஆயுள் உறுப்பினர்களை சேர்த்துள்ளது. இவ்வாரியம் தற்போது வணிகர்களுக்கு அளிக்கும் உதவிகள் பின்வருமாறு:-

(அ) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறநீரக அறுவை சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவ சான்றின் பேரில் ரூ.25,000.

(ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நல நிதி ரூ.50,000.

(இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க,

பாலிடெக்னிக், கலைக்கல்லூரி அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ.2000 (ஒரு ஆண்டிற்கு)

முதுநிலை படிப்பு அல்லது தொழிற் கல்வி, அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ.2000 (ஒரு ஆண்டிற்கு)



(ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

(உ) 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு கீழ்க்கண்ட தொகை பரிசாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ.5,000 |
| இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ.3,000 |
| மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ.2,000 |

(ஊ) விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன்/மகளுக்கு கீழ்க்கண்ட தொகை பரிசாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ.25,000 |
| அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ.10,000 |

மாநில அளவில் நடைபெறும்
போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.5,000

**குடும்ப நிதி உதவி**

17 வணிகர்களுக்கு ரூ.4,60,000 வழங்கப்படவுள்ளது.

**மருத்துவ உதவி**

சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து கொண்ட அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ஒரு வணிகருக்கு ரூ.25,000 வழங்கப்பட உள்ளது.

**கல்விக்கான நிதி உதவி**

10 வணிகர்களுடைய குழந்தைகளுக்கு ரூ.20,000 வழங்கப் பட உள்ளது.

மொத்த உதவித்தொகை ரூ.5,05,000 என்று கணக் கிடப்பட்டுள்ளது.

## குறை தீர்க்கும் பிரிவு

16. வணிகர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையூர் அலுவலகத்தில் 1984-ஆம் ஆண்டில் குறை தீர்க்கும் பிரிவு



ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிருவாகம்) தலைவராகவும் மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) உதவி ஆணையர் (வணிகவரி-2) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

## விற்பனை வரி ஆலோசனைக்குழு

17. விற்பனை வரி நிருவாகம் குறித்த வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாவட்ட அளவில் வணிக வரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக் கழகங்கள் வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான பிரச்சினைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும், வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இக்குழுக்களின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

## உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்:

18. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் தொகையில் 90 சதவீதத்தொகையை தற்போது உள்ளாட்சி


மன்றங்களுக்கு வழங்க கருதப்பட்டுள்ளது.

## காலம் தள்ளி வரிசெலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள்.

19. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்கு விப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையைத் தள்ளி விட அரசு அனுமதிக்கிறது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக விரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள் மற்றும் நலிந்த துணி ஆலைகள் ஆகியவை செலுத்த வேண்டிய வரிகளை காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கி வருகிறது. 1996-97-ம் ஆண்டில் 30.6.96ஆம் நாள் முடிய இவ்வகையில் ரூபாய் 4,011.94 இலட்சம் வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகை தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**வே. தங்கப்பாண்டியன்**
வணிகவரித்துறை அமைச்சர்





# வணிகவரித்துறையின் ஆட்சிப் பகுதிக் கோட்டங்கள்

